

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (17.4.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் 2025–2026ஆம் ஆண்டிற்கான கலை பண்பாட்டுத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்துப் பெற்றார். சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், கலை பண்பாட்டுத் துறை இயக்குநர் (மு.கூ.பொ.) திருமதி.கவிதா ராமு, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் உறுப்பினர் செயலர் திருமதி விஜயா தாயன்பன், தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழக துணை வேந்தர் டாக்டர் சீ.சௌமியா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்களை நேற்று (17.04.2025) தலைமைச் செயலகத்தில், சுற்றுலாத் துறை அமைச்சர் ஆர். ராஜேந்திரன் 2025–2026 ஆம் ஆண்டிற்கான சுற்றுலாத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், சுற்றுலாத் துறை ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி ஷில்பா பிரபாகர் சதீஷ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

# சீர்காழி தொகுதி கொள்ளிடம் வலது கரை சாலை சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்!

## சட்டப்பேரவையில் கவனஈர்ப்பில் அமைச்சர் துரைமுருகன் உறுதி!

**சென்னை, ஏப். 18**

**சீர்காழி தொகுதி கொள்ளிடம் வலதுகரை சாலையை சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று சீர்காழி மு. பன்னீர்செல்வம் கொண்டுவந்த கவனஈர்ப்பில் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் உறுதிபட தெரிவித்தார்.**

இது பற்றிய விவாதம் வருமாறு:-

**மு. பன்னீர்செல்வம்:** சீர்காழி தொகுதி கொள்ளிடம் வலது கரை சாலையை சீரமைக்க வேண்டியது குறித்து நீர்வளத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்து அமைகிறேன்.

**அமைச்சர் துரைமுருகன்:** விவர அறிக்கை ஒன்று உறுப்பினர் அவர்களின் மேசையின் மேல் உள்ள சிறுகணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டு உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மு.பன்னீர்செல்வம்:** விவர அறிக்கையை முழுமையாக படித்துப் பார்த்தேன். தஞ்சை மாவட்டம் மற்றும் மயிலாடுதுறை மாவட்டத்தில், அப்பகுதி முழுமைக்கும் புனரமைக்கும் திட்டம் ஒன்றும் கால்வாய்களில் தானியங்கி நுண்ணீர்ப் பாசன திட்டம் செயல்படுத்த ஒரு மிகப் பெரிய தஞ்சை மற்றும் மயிலாடுதுறை மாவட்டத்தில், ஆற்றுப் பகுதி முழுமைக்கும் ஒரு புனரமைக்கும் திட்டம் ஒன்றும், கால்வாய்களில் தானியங்கி நுண்ணீர்ப் பாசன திட்டத்தை செயல்படுத்த ஒரு விரிவான அறிக்கை திட்டம் செயல்படுத்த விரிவான இறுதித் திட்ட அறிக்கை தயாரிக்க SECON Private Limited என்ற company க்கு வழங்கப்பட்டிருக்கிறது.



அதற்காக அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இருப்பினும், கொள்ளிடம் வலது கரை சாலைக்கு மாற்றாக பனங்காட்டாங்குடியிலிருந்து புத்தூர் வரை ஒரு சாலை மாற்று சாலை இருப்பதாக விவர அறிக்கையில் அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அந்தச் சாலையைச் சுற்றிச் செல்ல வேண்டுமென்று சொன்னால் கிட்டத்தட்ட 10 ஊராட்சிக்கு மேற்பட்ட 40 கிராமங்கள் உள்ளிட்ட, கிராம மக்கள், பள்ளி மாணவர்கள், கல்லூரி மாணவர்கள், வேலைக்குச் செல்வோர், விவசாயிகள் தோட்டக்கலையை பயன்படுத்தி செல்லுகிற விவசாயிகள் அவர்கள் கொண்டு செல்கிற காய்கறிகளையெல்லாம் கொள்ளிடத்திற்கு வந்து சிதம்பரம் செல்ல வேண்டும், சீர்காழி செல்ல வேண்டும் மயிலாடுதுறை செல்ல வேண்டும்.

இதற்காக இந்த சாலை ஒன்று மட்டும்தான் இவர்களுக்கு குறைந்த தூரத்திலே உள்ள சாலை. அந்தச் சாலையை சீரமைத்துக் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே 2010 ஆம் ஆண்டு அமைச்சராக இருக்கிற பொழுதே, அவர்கள் ரூ.200 கோடி செலவில் அந்தக் கரையை பலப்படுத்தி சாலை அமைத்துக் கொடுத்தார்கள்.

அந்தச் சாலை முழுமையாக மக்கள் பயன்பாட்டிற்குரிய சாலை யாகும். எனவே, அந்தச் சாலையை சீரமைத்துக் கொடுக்க வேண்டும் என்று நீர்வளத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்து அமைகிறேன்.

**அமைச்சர் துரைமுருகன்:** உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிற அணைக் கரை முதல் காட்டூர் வரை 60 கி.மீ. நீளத்திற்கு வேளாண்மைத் திட்டத்தின்கீழ் 2021–ஆம் ஆண்டு சாலைவழி அமைக்கப்பட்டது. ஆனால், மழையின் காரணமாக அது பழுதுபட்டிருக்கிறது. தற்போது, 60 கி.மீ. நீளத்திற்கு புதிதாக சாலை போடுவதற்கு சுமார் 70 கோடி ரூபாய் ஆகும் என்று உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த 70 கோடி ரூபாயில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள மொத்த தூரத்தில், 30 கி.மீ. தூரம்தான் உறுப்பினர் அவர்களுடைய தொகுதிக்குள் வருகிறது; அதனுடைய மதிப்பீடு 35 கோடி ரூபாயாகும். ஆகையினால், உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, தஞ்சை, மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களில் கொள்ளிடம் ஆற்றுப் பகுதி முழுவதையும் புனரமைக்கவும் மற்றும் கால்வாய்களில் தானியங்கி தண்ணீர் பாசனத் திட்டத்தை செயல்படுத்தவும் அரசு முடிவு செய்திருக்கிறது. அதை எப்படி அமல்படுத்தலாம் என்பது குறித்து DPR தயாரிப்பதற்காக 9.96 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, வழங்கப்பட்டுள்ளது. அவர்கள் DPR தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

எனவே, உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, நடவடிக்கை எடுக்கிற வரையில், கொள்ளிடம் கரை வந்து, மாற்றுச்சாலையாக பனங்காட்டான்குடி முதல் புத்தூர் வரையுள்ள சாலையை பொதுமக்கள் பயன்படுத்துகிறார்கள். DPR கிடைத்தவுடன், மேற்படி திட்டம் குறித்து விரைவில் முடிவெடுக்கப்படும்.

**மு.பன்னீர்செல்வம்:** அந்தச் சாலையை பயன்படுத்துகிற மக்கள், அகரஎலத்தூர், வடரங்கம், மாதிரவேளூர், சோதியக்குடி, கோபாலசமுத்திரம், ஆனைக்காரன் சத்திரம், மகேந்திரப்பள்ளி, காட்டூர் வரை செல்கின்ற அந்த ஊராட்சிகளைச் சேர்ந்த மக்கள் அந்தச் சாலையைத்தான் பயன்படுத்தி வருகிறார்கள். அந்தச் சாலை குண்டும், குழியுமாக மக்கள் நடக்கவே முடியாத அளவிற்கு மோசமாக உள்ளது. எனவே, அந்தச் சாலையை சமன் செய்து, ஓர் ஓரடுக்கு சாலை யாக்கக்கூட போட்டுக் கொடுக்கலாம். அமைச்சர் அவர்கள் ஒரு மூத்த அமைச்சர்; தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் அமைச்சராக இருந்தவர்; நம்முடைய தளபதியார் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் அமைச்சராக இருக்கிறார்; வருங்காலத்தில் நம்முடைய இளம் தலைவர் துணை முதலமைச்சர் உதயநிதி அவர்களுடைய ஆட்சிக் காலத்திலும் அமைச்சராக இருக்கப்போகிறவர். இந்தச் சாலையை முழுமையாக ஓரடுக்கு சாலையாகப் போட்டுக் கொடுக்க வேண்டும் என்று கேட்டு, அவருடைய கவனத்தை ஈர்த்து அமைகிறேன்.

பேரவைத் தலைவர்: நீங்கள் எல்லாவற்றையும் சரியாகச் சொன்னீர்கள். அவர் ஓர் இளமையான அமைச்சர் என்று கூறியிருக்கலாமே! மூத்த அமைச்சர் என்று கூறியதுதான் தவறு.

**அமைச்சர் துரைமுருகன்:** உறுப்பினர் அவர்கள், மிகவும் பழைய உறுப்பினர். அவர், ஒருமுறை சவால்விட்டு ஜெயித்தவர். ஆகையினால், அவர் சொல்வதில் நியாயம் இருக்கும் என்பதை நான் உணர்கிறேன். உறுப்பினர் பன்னீர்செல்வம் அவர்கள், தவறாக சொல்லக்கூடியவர் அல்லர். அந்தச் சாலை நீர்வளத் துறையின்கீழ் வருமென்றால், அதை அமைத்துக் கொடுப்பதற்கு நான் ஏற்பாடு செய்கிறேன். அது எங்கள் துறையின்கீழ் வரவில்லையென்றால், பொதுப் பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள், அதில் கவனம் செலுத்தி போட்டுத் தருவார்கள்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

## மாங்காடு மற்றும் குன்றத்தூர் நகராட்சிகளில்

# பாதாள சாக்கடைத் திட்டத்தில் விடுபட்ட பகுதிகளைச் சேர்க்க நடவடிக்கை!

## சட்டப்பேரவையில் கு.செல்வப்பெருந்தகை கொண்டுவந்த சிறப்பு கவனஈர்ப்பில் அமைச்சர் கே.என்.நேரு விளக்கம்!

**சென்னை, ஏப்.18-**

**சட்டப்பேரவையில் கு.செல்வபெருந்தகை கொண்டு வந்த சிறப்பு கவனஈர்ப்பில் அமைச்சர் நேரு, மாங்காடு மற்றும் குன்றத்தூர் நகராட்சிகளில் பாதாள சாக்கடைத் திட்டத்தில் விடுபட்ட பகுதிகளை சேர்க்க நடவடிக்கை எடுப்பது பற்றி விளக்கமான பதிலளித்தார்.**

சட்டப்பேரவையில் மாங்காடு மற்றும் குன்றத்தூர் நகராட்சிகளில் பாதாள சாக்கடைத் திட்டத்தில் விடுபட்ட பகுதிகளைச் சேர்த்தல் குறித்து கவனஈர்ப்பு தீர்மானத்தை கு.செல்வபெருந்தகை கொண்டு வந்தார்.

இதற்கு நகராட்சித்துறை அமைச்சர் கே.என்.நேரு அளித்த விளக்க பதில் வருமாறு: -

உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொண்டது, நான் முழுமையாக காஞ்சிபுரம் மாவட்டத்தில் இருக்கிற நகராட்சிகள், பேரூராட்சிகளில் என்னென்ன பணிகள் நடைபெற்று இருக்கின்றன என்பதை இங்கே எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். மாங்காடு மற்றும் குன்றத்தூர் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்தில் விடுப்பட்ட பகுதிகளை சேர்க்க வேண்டியது குறித்து உறுப்பினர் அவர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறீர்கள். பாதாள சாக்கடைத் திட்டம் பற்றிய கூடுதல் விவரங்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் மாநகராட்சி, குன்றத்தூர், மாங்காடு, ஸ்ரீபெரும்புதூர் ஆகிய நகராட்சிகளில் மற்றும் உத்திரமேரூர், வாலாஜாபாத் ஆகிய பேரூராட்சிகள் உள்ளன. காஞ்சிபுரம் மாநகராட்சி 36 சதுர கிலோ மீட்டர் பரப்பளவும், 51 வார்டுகளும், 2,26,000 மக்கள் தொகை கொண்டதாகவுள்ளது. இம்மாநகராட்சியில் 340 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில், பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் 2024–ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, 2027–ஆம் ஆண்டு முடிக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது. தற்போது அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

குன்றத்தூர் மற்றும் அருகில் உள்ள 11 ஊராட்சிப் பகுதிகளை ஒருங்கிணைத்து, 2021–ஆம் ஆண்டில் குன்றத்தூர் நகராட்சி உருவாக்கப்பட்டது. குன்றத்தூர் நகராட்சி 9 சதுர கிலோ மீட்டர் பரப்பளவும், 30 வார்டுகளும், 42,126 மக்கள் தொகை கொண்டதாகவுள்ளது. இதில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிக்காக, கழிவுநீர் நீரேற்று நிலையம், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, விரிவான திட்ட அறிக்கை (DPR) தயாரிக்கப்பட்டுள்ளது. இதேபோல், மாங்காடு நகராட்சியில் 8.40 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுடன், 27 வார்டுகளைக் கொண்ட முதல்நிலை நகராட்சியாக உள்ளது. இந்நகராட்சியில் மொத்த மக்கள் தொகை 58,068 ஆகும். இதில் அனைத்துப் பகுதிகளுக்கும் சுமார் 84 கிலோ மீட்டர் நீளத்திற்கு கழிவுநீர் கட்டமைப்பு வசதி ஏற்படுத்த ரூ.217 கோடி மதிப்பீட்டில் திட்டத்தினை செயல்படுத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



ஸ்ரீபெரும்புதூர் நகராட்சியில் 13.39 சதுர கிலோ மீட்டர் பரப்பளவும் மற்றும் 15 வார்டுகளும், சுமார் 24,864 மக்கள் தொகை கொண்ட நகராட்சியாக உள்ளது. இந்நகராட்சியில் ரூ.361 இலட்சம் மதிப்பீட்டில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. உறுப்பினர் அவர்கள் சொன்னது, மாங்காடு நகராட்சியில் இருக்கிற 11 கிராமங்கள் அதில் விடுபட்டிருக்கிறது. அதனையும் இதில் சேர்க்க முடியுமா என்று கேட்டிருக்கிறீர்கள். ஏற்கெனவே திட்டமிடப்பட்டது; அதில் கூடுதலாகப் பகுதிகளை சேர்ப்பது, மாங்காடு நகராட்சி முழுவதுமாக கழிவுநீர் அகற்றுகின்ற அந்தப் பணி எடுத்துக் கொண்டு, செயல்படுத்த அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பரிட்சார்த்த முறையில், பெருநகர சென்னை மாநகராட்சியில் அதுபோல் குழாய்கள் பதிக்கின்ற பணி, வட சென்னை பகுதியில் எடுத்துக்கொள்ளப்பட்டு, அந்தப் பணிகள் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஒரு சாலையைத் தோண்டி, கழிவுநீர் குழாய் பதிக்கின்றபோது, குடிநீர் குழாயையும் இணைத்து அமைக்க வேண்டுமென்றால், இடையில் ஏதாவது சங்கடம் ஏற்பட்டு, குழாய்கள் பழுதுபட்டால், குடிநீரில் கலந்துவிடும் என்ற நிலையிருக்கிறது. அதனால், அந்தப் பணியைத் தொடர்ந்து செய்ய முடியவில்லை. நீங்கள் சொல்வதுபோன்று, இருக்கின்ற பணிகளை துரிதமாகச் செய்ய வேண்டுமென்று சொன்னால், சாலைகள் போடுவது, கட்டடங்கள் கட்டுவது போன்ற பணிகளை ஒப்பந்ததாரர்கள் எளிதாக நிறைவேற்றிவிடுவார்கள்.

குறிப்பாக, குடிநீர் பணிக்காகவும், கழிவுநீருக்காக சாலைகளை தோண்டுகிறபோது, பல இடங்களில் நிறைய traffic இடைஞ்சல். உடனடியாக அந்தப் பணியை செய்வது என்பது இயலாத காரியம். Traffic இருக்கிறது. நகரப் பகுதியில் செய்து முடிப்பதென்பது, இரவில் பத்து மணிக்கு மேல்தான் இத்தகைய பணிகளை தொடங்க முடியும். காலை 6 மணிக்குள்ளாக முடிக்க வேண்டும். அப்படி முடிக்கின்றபோது, ஏன் அந்தச் சாலைகளை உடனடியாகச் செப்பனிட முடியவில்லை என்றால், வீட்டு இணைப்புகளை தர வேண்டியிருக்கிறது. வீட்டு இணைப்புகள் தருகிறபோது, வீட்டு உரிமையாளர்கள் உரிய முறையில் விண்ணப்பித்து, அதற்குரிய கட்டணத்தை கட்டினால், உடனடியாக அந்தப் பணிகள் சரியாக முடிந்து விடும். ஆனால், ஒவ்வொன்றாக நடைபெறுவதால் காலதாமதம் ஏற்படுகிறது. எவ்வளவு விரைவுப்படுத்தினாலும் பல இடங்களில் காலதாமதமாகிறது. இருந்தும், உறுப்பினர் அவர்கள் தேர்தல் களம் என்று சொல்லியிருக்கிறீர்கள். விரைவாக பணிகளை முடிக்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருக்கிறோம். விரைந்து பணிகளை செய்ய அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்பதை தங்களின் வாயிலாக உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கே. என்.நேரு விளக்கமான பதிலளித்தார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### த. சின்னச்சாமி

### ஏப்ரல் 18 (2005)



கழகம் தொடங்கிய போதே உறுப்பினராகி கழகப் பணியாற்றி, தலைமைச் செயற்குழு உறுப்பினராக பொறுப்பு வகித்தவர்.

மதுரை மாநகராட்சி மன்ற உறுப்பினராகவும் – மதுரை மாநகராட்சி துணை மேயராகவும் பொறுப்பேற்று சிறப்பாக பணியாற்றியவர்.

1965–ல் இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் பங்கு பெற்றதோடு, கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# மதுரவாயல் - 149 வது வட்டத்தில் சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சி!

## காரம்பாக்கம் கணபதி எம்.எல்.ஏ. துவக்கி வைக்கிறார்!

*சென்னை, ஏப். 18 -*

முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி, வார்டு 149 ல் உள்ள ஆழ்வார்திருநகரில் அமைத்துள்ள ஸ்ரீ குகா திருமண மண்டபத்தில் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் துறை சார்பில் 100 கர்ப்பிணி பெண்களுக்கு சமுதாய வளைகாப்பு விழா நிகழ்ச்சி இன்று 18.04.2025 மாலை 5.00 மணியளவில் காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்ச்சில் மண்டலக் குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன், அயப்பாக்கம் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் அயப்பாக்கம் துரைவீரமணி. தலைமை செயற்குழு உறுப்பினர் எஸ்.அருணாசலம், தலைமை பொதுக் குழு உறுப்பினர் இராமாபுரம் வ.செல்வகுமார், பகுதி கழக நிர்வாகிகள் பி.எம்.செல்வராஜ், வே.மதியழகன், இரா.பால்பாண்டியன், எஸ்.பாரதி, கே.ராஜி, ஆர்.கர்ணல், தீ.பாலாஜி, செந்தில்சுரேஷ், ஆ.மாலினி, ம.உதயகுமார், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் வி.ராஜேஷ், அ.விஜயபாலா, எஸ்.பி.அருள், கே.குமரேசன், மா.இ.அ.து. அமைப்பாளர்கள் ச.சங்கர்கணேஷ், செ.ரவி, வட்ட கழக செயலாளர்கள் S.ரமேஷ்ராஜ், த.ரமேஷ், சி.சுந்தர், அ.மோசஸ், தி.சார்லஸ், ஆ.செல்வம் எஸ்.ஜி.மாதவன், எம்.கே.பி.அண்ணாதாசன், எம்.எம்.ஜெயரத்தினம், சி.சசிகுமார், ப.ஆலன், எம்.ரூபன், மாமன்ற உறுப்பினர்கள் செல்விரமேஷ், ஹேமலதா கணபதி, , சாந்திஇராமலிங்கம், எம்இ.ஸ்டாலின், ரமணிமாதவன், மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழகத் தோழர்கள், அரசுத் துறை அதிகாரிகள் கலந்து கொள்கிறார்கள்.

## உள்ளாட்சி அமைப்புகளில் பிரதிநிதித்துவம்!

# மாற்றுத்திறனாளிகளுக்குச் சூட்டப்படும் மகுடம்!

## கவிப்பேரரசு வைரமுத்து புகழாரம்!



முத்தமிழறிஞர்
கலைஞரின் பிறந்தநாள்
செம்மொழித் திருநாள்
என்ற தமிழ்நாடு அரசின்
அறிவிப்பில்
நான் மகிழ்ந்து நிற்கிறேன்

ஆனால்,
கலைஞரே மகிழ்ச்சியடையும்
ஒரு சட்ட மசோதாவைச்
சட்டமன்றத்தில்
முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்
முன்மொழிந்திருக்கிறார்

உறுப்புக்குறை
உள்ளவர்களுக்கு
மாற்றுத்திறனாளிகள் என்ற
மரியாதைப் பட்டம்
சூட்டியவர் கலைஞர்

அவர்களுக்கு
உள்ளாட்சி அமைப்புகளில்
பிரதிநிதித்துவம் வழங்குவது
மாற்றுத்திறனாளிகளுக்குச்
சூட்டப்படும் மகுடமாகும்

இது
இயற்கை செய்த தவறுகளை
ஓர் ஆட்சியாளன் திருத்தும்
முயற்சியாகும்

இந்தியா முழுவதுமல்ல
உலகம் முழுவதும்
பின்பற்றத்தக்க
பெருங்கொள்கையாகும்

தங்களைப் பகைவர்களாகக்
கருதிக்கொண்டிருக்கிற
தூரத்து நண்பர்களும்
உள்ளுக்குள் பாராட்டிக்கொள்ளும்
உயர்ந்த பணியாகும் இது



கவிப்பேரரசு
**வைரமுத்து**